www.freetnbooks.com

| இரண்டாம் பருவ நிறைவுத் தேர்வு - 2025 | 6ஆம் வகுப்பு | |
|---|---|---|
| கணிதம் | மதிப்பெண்கள் 60 | நேரம் 2.00 மணி |

**I. சரியான விடையைத் தேர்தெடுத்து எழுதுக.** 5 x 1 = 5

1. இரட்டை எண்களில் ஒரே பகா எண்
   அ) 4 ஆ) 6 இ) 2 ஈ) 0
2. பின்வரும் இணைகளில் எவை சார்பகா எண்களாகும்?
   அ) 51, 63 ஆ) 52, 91 இ) 71, 81 ஈ) 81, 99
3. 1006 கிராமுக்கு சமமானது?
   அ) 1 கி.கி 6 கி ஆ) 10 கி.கி 6 கி இ) 100 கி.கி 6 கி ஈ) 1 கி.கி 600 கி
4. தள்ளுபடி = குறித்த விலை - ..................
   அ) இலாபம் ஆ) விற்பனை விலை இ) நட்டம் ஈ) அடக்க விலை
5. ஒரு முக்கோணத்தின் இருபக்க அளவுகள் 5 செ.மீ, 9 செ.மீ எனில் மூன்றாவது பக்க அளவு .............
   அ) 5 செ.மீ ஆ) 3 செ.மீ இ) 4 செ.மீ ஈ) 14 செ.மீ

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 x 1 = 5

6. இரு அடுத்தடுத்த இரட்டை எண்களின் மீ.பெ.கா ............. ஆகும்.
7. 50 கி.கி ÷ 100 கி = .................
8. 29 மற்றும் ............ ஆகிய எண்கள் பகா இரட்டை ஆகும்.
9. இரண்டு நாட்கள் = ................. மணி நேரம்.
10. ஒரு முக்கோணத்தின் 3 கோணங்களின் கூடுதல் ..................

**III. சரியா, தவறா என எழுதுக.** 5 x 1 = 5

11. ஒவ்வொரு இயல் எண்ணும், பகா எண்ணாகவோ அல்லது பகுஎண்ணாகவோ இருக்கும்.
12. 17 மற்றும் 18ன் மீ.பெ.கா 1 ஆகும்.
13. புகழேந்தி 100 கி வேர்கடலை வாங்கினான். அது 0.1 கி.கி க்கு சமம்.
14. ஒரு முக்கோணத்தின் 3 பக்கங்களும் சமம் எனில் அது, சமபக்க முக்கோணம் ஆகும்.
15. 16254 என்ற எண்ணானது 2, 3, 6 மற்றும் 9 ஆகிய எண்களால் வகுபடும்.

**IV. பொருத்துக.** 5 x 1 = 5

| | | |
|---|---|---|
| 16. அனைத்துப் பக்கங்களும் வெவ்வேறானவை | - | இரு சமபக்க முக்கோணம் |
| 17. ஏதேனும் ஒரு கோணம் செங்கோணம் | - | அசம பக்க முக்கோணம் |
| 18. ஏதேனும் ஒரு கோணம் விரிகோணம் | - | செங்கோண முக்கோணம் |
| 19. எவையேனும் இருபக்கங்கள் சமம் | - | சமபக்க முக்கோணம் |
| 20. மூன்று பக்கங்களும் சமம் | - | விரிகோண முக்கோணம் |

**V. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி.** 10 x 2 = 20

21. வகுத்தல் முறையை பயன்படுத்தி 128 ஐ காரணிப்படுத்துக.
22. 40 மற்றும் 56ன் மீ.பெ.கா காண்க.
23. பகா காரணி முறையில் 8, 12 ன் மீ.சி.ம காண்க.



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam

www.freetnbooks.com

24. தமிழ்நாட்டின் ஆண்டு சராசரி மழையளவு 998 மி.மீ. இதனை சென்டிமீட்டரில் மாற்றுக.

25. 24 மணி நேர அமைப்பில் மாற்றுக. I) 3.15 மு.ப II) நள்ளிரவு 12:00

26. ஒரு மேசையானது ரூ.4500 க்கு வாங்கப்பட்டு ரூ.4800 க்கு விற்கப்படுகிறது எனில் இலாபம் அல்லது நட்டம் காண்க.

27. முத்து ஒரு மகிழுந்தை ரூ.8,50,000 க்கு வாங்கினார். அதை ரூ.25,000 இலாபத்திற்கு விற்பனை செய்ய விரும்பினார் எனில் மகிழுந்தின் விற்பனை விலை என்ன?


28. 25 கி.கி எடையுள்ள கோதுமை பை ஒன்று ரூ.1550 க்கு விற்பனை செய்யப்பட்டு ரூ.150 இலாபம் பெறப்படுகிறது எனில் கோதுமைப் பையின் அடக்க விலை என்ன?

29. 7 செ.மீ, 10 செ.மீ மற்றும் 5 செ.மீ ஆகியவை ஒரு முக்கோணத்தின் பக்கங்களாக இருக்க முடியுமா?

30. $80^\circ, 30^\circ, 40^\circ$ ஆகிய கோண அளவுகளைக் கொண்டு ஒரு முக்கோணம் அமைக்க முடியுமா?

31. நான் மூன்று கோணங்களும் $60^\circ$ ஆகக் கொண்ட ஒரு மூடிய உருவம் ஆவேன். நான் யார்?

32. $3a + b$ ஐ மரவுரு வரைபடமாக மாற்றுக.

33. 

மரவரைபடத்தை எண்கணித கோவையாக மாற்றி எழுதுக.

## VI. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. 5 x 3 = 15

34. இரு எண்களின் மீ.சி.ம 432, மீ.பெ.கா 36, ஓர் எண் 108 எனில் மற்றோர் எண் என்ன?

35. முழுவதுமாக நிரப்பப்பட்டுள்ள 80 லி, 100 லி மற்றும் 120 லி கொள்ளளவு உடைய கலன்களில் பாலினை சரியாக அளக்கக்கூடிய பாத்திரத்தின் அதிகபட்ச கொள்ளளவு என்ன?

36. ஒரு குழந்தைக்கு நாள் ஒன்றுக்கு 100 கி காய்கறிகள் தேவைப்படுகிறது. 90 குழந்தைகள் உள்ள பள்ளிக்கு எத்தனை கிலோகிராம் காய்கறிகள் தேவைப்படும்?

37. மலரின் பிறந்த நாள் 20.11.1999 ஆகும். 5.10.2018 அன்று அவளுடைய வயதைக் கணக்கிடுக.

38. ஒரு பழ வணிகர் ஒரு டசன் ஆப்பிள்களை ரூ.84 க்கு வாங்கினார். 2 ஆப்பிள்கள் அழுகிவிட்டன. அவருக்கு ரூ.16 இலாபம் கிடைக்க வேண்டும் எனில், ஒரு ஆப்பிளின் விற்பனை விலையைக் காண்க.

39. இரகு ஒரு நாற்காலியை ரூ.3000 க்கு வாங்குகிறார். அந்நாற்காலியின் விலையில் ரூ.300 தள்ளுபடி செய்தபின் ரூ.500 இலாபம் பெறுகிறார் எனில் அந்நாற்காலியின் குறித்த விலை என்ன?

40. மரவுரு வரைபடமாக மாற்றுக. (10 x 9) – [ (8 x 2) + 3 ]

## VII. எவையேனும் ஒன்றுக்கு விடையளி. 1 x 5 = 5

41. கொடுக்கப்பட்டுள்ள கோட்டிற்கு மேலே உள்ள ஒரு புள்ளி வழியே அக்கோட்டிற்குச் செங்குத்துக் கோடு வரைக.

(அல்லது)

$AB$ = 6.5 செ.மீ அளவுள்ள கோட்டுத்துண்டிற்கு மேலே $M$ என்ற புள்ளியை குறிக்க. $M$ வழியே $AB$ கோட்டுத்துண்டிற்கு இணைகோடு வரைக.



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam